சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1 தங்கமணி, த/பெ. சன்முக முதலியார் , வயது.63

**<u>சாட்சி ஆஜர். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.–</u>**

நான் 17 வருடங்களாக இராணுவத்தில் பணி செய்தேன். நான் விருப்ப ஒய்வு பெற்றுவிட்டேன். என்னை வேலையை விட்டு சஸ்பண்டு செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எக்ஸ் ஆர்மி என்று ஆட்டோவில் ஸ்ட்க்கர் ஒட்டக்கூடாது என்றால் என்னுடைய வாகனம் என்பதால் நான் ஒட்டியுள்ளேன். என்னுடைய வாகனம் ஓட்டும் உரிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, தற்போதும் என்னிடம் உள்ளது. எனது வாகனத்தின் ஆர்சி புக், இன்சூரன்ஸ் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவை அனைத்தும் இல்லாமல் தான் நான் வாகனம் ஓட்டி வருகிறேன் என்றும், இதைகேட்டால் நான் இராணுவத்தில் பணிபுரிந்து வந்ததாக கூறி போலிசார்களை மிரட்டுவேன் என்றால் சரியல்ல. இவ்வாறு பிரச்சனை செய்து போலிசார்களுக்கு நான் தொந்தரவு கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதே போல் என் மீது சி.சி. எண் 112/2015 என்ற வழக்கு என் மீது தாக்கல் செய்யப்பட்டு, அதில் சாட்சியங்கள் சரிவர இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சி.சி.டி.வி புட்டேஜ் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை வரைபடத்திலும் காட்டவில்லை. நான் நேர்மையாக நடந்துக்கொண்டேன் என்பதற்கு மேற்கண்ட வழக்கில் ஆவணங்களோ, சிசிடிவி புட்டேஜ் ஆகியவற்றை தாக்கல் செய்தேனா என்றால் தனியார் சிசிடிவி இருப்பது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி ராணி சம்பவத்தின் போது நகர காவல் நிலையத்தில் பணியில் இல்லை என்றால் சரியல்ல, அவர் அங்கு தான் இருந்தார். 1ம் எதிரி பணியிலிருந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அந்த சமயம் 1ம் எதிரி எந்த காவல் நிலையத்தில் பணியில் இருந்தார் என்று எனக்கு தெரியாது, 2ம் எதிரியும், 3 ம் எதிரியும் அன்றையதினம் பணியில் இல்லை என்றால் சரியல்ல, அங்கு தான் இருந்தார்கள். அது சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியுள்ளது. சி.சி.டி.வி புட்டேஜ் – ஐ வாங்குவதற்கு 2015 ம் வருடம் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் போலிசாரிடம் கேட்டேன் அவர்கள் கொடுக்கவில்லை. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தேனா என்றால் இல்லை, புதியதாக தற்போது மனு தாக்கல் செய்தேன், அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது எனக்கு வெளிக்காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் இருந்த இருவர் சுமார் 5 மணி நேரம் இருந்தார்கள். எனக்கு எந்த வித காயமும் ஏற்படதாதா தான் மருத்துவர்கள் சான்றிதழ் வழுங்கவில்லை என்றால் சரியல்ல, எனக்கு உள்காயம் இருந்தது. அதற்கும் எந்த வித சான்றிதழும் வழங்கவில்லை என்றால் ஒபி சீட்டில் சிகிச்சை செய்தார்கள். எதிரிகளின் செயல்களின் மேல் அதிகாரியிடம் மனு செய்தேனா என்றால் செய்தேன். அவர்கள் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சாலை விதிகளை மதிக்காமல் எந்த வித முறையான ஆவணமும் இல்லாமல் மாவட்ட ஆட்சியரின் உத்தரவு படி தடை செய்யப்பட்ட சாலையில் நான் ஒருவர் மட்டும் ஆட்டோ ஒட்டி, பொதுமக்களுக்கு தொந்தரவு கொடுப்பேன் என்றும், அதை போலிசார் கேட்டால் அவர்கள் மீது புகார் மனுக்களை கொடுத்து வருவேன் என்றால் சரியல்ல, அவ்வாறு எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. என்னை காவல் நிலையத்தில் துன்புறுத்திய போது வேறு ஏதேனும் பொதுமக்கள் வந்தார்களா என்றால் இரண்டு ஆட்டோ ஒட்டுநர்கள் இருந்தார்கள். என்னை சம்பவதன்று 6.30 மணிக்கு வீட்டிற்கு செல்லுமாறு சொன்னார்கள் என்றால் சரிதான், நான் சிகிச்சை வேண்டும் என்று கேட்டேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 17.08.2023 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

Signature of witness.